# Themes of Kurinji Landscape Leaders in the Kuruntokai

**M. Nikitha**
*Ph.D. Research Scholar, Department of Tamil Literature*
*S.T. Hindu College, Nagercoil*

**Dr. A. Ponnammal**
*Associate Professor, Department of Tamil Literature*
*S.T. Hindu College, Nagercoil*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346724

**Abstract**

*Among ancient literary genres, Sangam literature holds a prominent place. Sangam literature reflects both the external and internal events of people in the Sangam period, focusing on their way of life. Love and war are indispensable aspects of Tamil life and naturally form the core themes of Sangam poetry. Kuruntokai, one of the eight anthologies (Ettuthokai), is primarily concerned with agam (interior life, love) themes. Its content revolves around natural landscapes, locations in pastoral life, the affections of chieftains and leaders, and emotional experiences like longing and separation. The poems are closely connected to natural imagery, and scholars have classified the landscapes into five types, known collectively as the Ainthinai. Among these, the Kurinji (mountainous) landscape is particularly significant. This study examines the themes related to leaders of the Kurinji landscape in Kuruntokai, focusing on love, emotion, and natural settings as represented in these poems.*

***Keywords:*** *Kurinji, Leaders, Thematic Content, Interior Life, Pastoral Life*

**References**

1. SaminathaIyer, U.V., Kuruntokai, Original Text and Commentary, Sudarsan Graphics Pvt. Ltd., Thiyagarayanagar, Chennai 600017, First Edition 1937
2. Subbiah Maniam, S.V., Tolkappiyam, Thol. Manivasagar Publications, First Edition 1998
3. Thirugnanasambandham, S., Explanation of Agam Themes in Narkkavi Series, Kadhir Publications, Thiruvaiyaru
4. Nagamasan, V., New Century Book House Pvt. Ltd., 41, PCS Citco Industrial Estate, Ambattur, Chennai, First Edition 2004
5. Manickam, V. Subba, Tamil Love Poems, Bari Nilayam, 59, P.M. Road, Chennai, First Edition 1962

# குறுந்தொகையில் குறிஞ்சி நிலத் தலைமாந்தர்களின் பாடுபொருள்

***ம. நிகிதா***
பதிவுஎண் : 23213154022020, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்க்கலை ஆய்வகம், தெ.தி இந்துக்கல்லூரி, நாகர்கோவில்

***முனைவர் அ. பொன்னம்மாள்***
இணைப் பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம்
தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்

***ஆய்வுச்சுருக்கம்***

*பழமையான இலக்கிய வகைகளில் முதன்மையானது சங்க இலக்கியம். சங்ககால மக்களின் அகப்புற நிகழ்வுகளை இவ்விலக்கியம் வெளிப்படுத்துகின்றது. இலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டு படைக்கப்படுகின்றன. அவ்வகையில் சங்க இலக்கியங்கள், சங்ககால மக்களின் வாழ்வியலைக் குறிப்பிடுகின்றது. தமிழர்களின் வாழ்வியலில் இன்றியமையாத இடம்பெறுவது காதல் மற்றும் வீரம். இவையே முறையாக சங்க இலக்கியங்களின் பாடுபொருளாக அமைகின்றது. எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகை அகமரபு சார்ந்த நூலாகத் திகழ்கின்றது. அகத்திணைக்குரிய பாடுபொருளாக களவு வாழ்க்கையில் இடம்பெறும் இயற்கை புணர்ச்சி, இடந்தலைப்பாடு, தலைவன் தலைவியர் அன்பு, மடலேறுதல் போன்றவை அமைகின்றது. குறுந்தொகை பாடல்கள் முழுவதும் இயற்கை காட்சிகளோடு தொடர்புடையவை. நிலங்களை ஐவகையாக பாகுபாடு செய்த புலவர்கள் அதனை 'அன்பின் ஐந்திணை' என்று குறிப்பிட்டுள்ளனர். ஐந்திணைகளுள் முதன்மையாக விளங்குவது குறிஞ்சி நிலமாகும். அத்தகைய அன்பை மையமாகக் கொண்ட குறுந்தொகையின் குறிஞ்சிநிலத் தலைமாந்தர்களின் பாடுபொருள்களை ஆராயும் விதமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.*

***திறவுச்சொற்கள்:*** *குறிஞ்சி, தலைமக்கள், பாடுபொருள், அகவாழ்வு, களவு*

**முன்னுரை**

பழந்தமிழரின் பண்பாட்டை உலகிற்கு பிரதிபலிப்பவை சங்ககால இலக்கியங்களே. சங்க இலக்கியப் பாடல்கள் அக்கால மக்களின் வாழ்வியல் கூறுகளை மிகத் தெளிவாகக் காட்சிப்படுத்துகின்றன. பழந்தமிழர்கள் அவர்கள் வாழ்ந்த நிலங்களின் அமைப்பிற்கும் சூழலுக்கும் தகுந்தவாறு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகையாக பாகுபடுத்தி அவற்றில் வாழ்வை மேற்கொண்டுள்ளனர். சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டு முதலிய நூல்களின் வழி ஐவகை திணைச் சார்ந்த செய்திகள் புலப்படுகிறது. அவற்றில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகை, சங்ககால வாழ்வில் தலைவன் தலைவியின் அகவாழ்வு சார்ந்த செய்திகளை, அத்திணைக் குடிநிலங்களின் உயிரினங்கள், தாவரம் மற்றும் இயற்கை சார்ந்த காட்சிகளோடு இணைத்துப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்துகிறது. தலைவன் தலைவி கூற்று, தோழிகூற்று என கூற்று வகையிலே பாடல்கள் அமைந்துள்ளது. அவ்வகையில் குறுந்தொகை குறிஞ்சித் திணைப்பாடல்கள் வழிதலை மக்களின் பாடுபொருள் குறித்த கருத்துக்களை இக்கட்டுரை விளக்குகிறது.

**குறுந்தொகையில் குறிஞ்சி**

குறுகிய அடிகளைக் கொண்ட பாடல்களின் தொகுப்பு என்பதால் 'குறுந்தொகை' என பெயர் பெற்றது. இதனை 'நல்ல குறுந்தொகை' எனவும் வழங்குகின்றனர். இதில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திணை குறித்த செய்திகளுள் பாடல்களின் வாயிலாக அறியலாகின்றது. குறிஞ்சி நில உரிப்பொருளான புணர்தல் என்பது அகவாழ்வை மையமாகக் கொண்டது. தலைவன் தலைவியின் அன்பினது வெளிப்பாடாக நிகழ்வதே புணர்தலாகும். குறுந்தொகை பாடல்கள் பெரும்பாலும் தலைவன் தலைவிக்கான களவு வழிபட்டதேயாகும். குறுந்தொகையும் குறிஞ்சியும் சொல்லமைப்பில் மட்டுமல்லாமல் கருத்தமைப்பிலும் தொடர்புக் கொண்டு விளங்குகிறது. குறுகிய பாடல் அடிகளில் நிலங்களின் வருணனையோடு, அகவாழ்வையும் தெளிவுபட குறுந்தொகை குறிப்பிடுகிறது.

**அகத்திணையில் பாடுபொருள்**

பாடுபொருள் என்பது செய்யுள் பகுதியின் கருத்து அல்லது செய்தி எனலாம். தமிழ்மொழியில் உள்ள இலக்கியங்களின் பாடுபொருளுக்கு எழுதப்பட்ட இலக்கணமே பொருள் இலக்கணமாகும். இலக்கியங்களின் செய்யுள் பகுதிகளை புரிந்துகொள்வதற்கு பொருள் இலக்கணம் பயன்படுகிறது. தமிழ்மொழியில் காணப்படும் இலக்கியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு முதலியவற்றுள் ஒன்றை பாடுபொருளாகக் கொண்டுப்பாடப்படுகிறது.

சங்க இலக்கியங்கள் அகப் புறவாழ்வியல் கருத்துக்களைப் பாடு பொருளாகக் கொண்டுள்ளது. அவ்வகையில் குறுந்தொகை அகம்சார்ந்த பாடுபொருளை உள்ளடக்கியது. குறுந்தொகை குறிஞ்சித் திணையில் காணப்படும் பாடல்கள் தலைவன் தலைவி களவு வாழ்க்கையின் கூறுகளை கொண்டு திகழ்கின்றது. காமத்தைபாடு பொருளாகக் கொண்ட அகத்திணையின் சிறப்பினை டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள், "அகப்பாடல்கள் உயிர்கள் பிறத்தற்கும் பிறப்பிப்பதற்கும் அடிப்படையான இன்பவுணர்வை உலகின் அருங்கு அறாது வழிமுறை காக்கும் காமத்துடிப்பைப் பொருளாகக் கொண்ட தன்மையுடையது" எனக் கூறுகிறார். (வ. சுப. மாணிக்கம், பக்கம்: 72)

**தலைவன் தலைவியின் பாடுபொருள்**

தமிழ்மொழியில் காணப்படும் இலக்கியங்கள் ஒவ்வொன்றும் தனித் தனி காலக்கட்டங்களில் உள்ள மக்களின் வாழ்வியலை பிரதிபலிப்பதாகவும், அவர்களின் தேவைக்கேற்ப உருப்பெற்றவையாகவும் உள்ளன. அதன் வழி சங்க இலக்கியங்களில் அகம் சார்ந்த பாடல்களின் தலையாயப் பாடுபொருளாக தலைவன் தலைவியின் களவு வாழ்வு அமைந்துள்ளது. இதனை தொல்காப்பியத்தில்,

> **"காமப்புணர்ச்சியும் இடந்தலைப்படலும்**
> **பாங்கொடுதழா அலும்தோழியிற்**
> **புணர்வுமென்று ஆங்கநால் வகையினும்**
> **அடைந்தசார்வொடு மறையென**
> **மொழிதல் மறையோர்ஆறே"**
>
> **(தொல். பொரு.487)**

என தொல்காப்பியர் களவு வாழ்வினைக் குறிப்பிடுகிறார். இதில் இயற்கைபுணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கர்கூட்டம், தோழியற்கூட்டம் போன்ற பிரிவுகள் குறிஞ்சித்திணை சார்ந்து அமைகின்றது. இதன் வழியே குறிஞ்சித் திணையின் உரிப்பொருளான புணர்தலும் புணர்தல் நிமித்தமும் வெளிப்படுகின்றது. குறிஞ்சித் திணையின் பாடுபொருள்கள் அந்நில மக்களின் மன உணர்வுகளையும் இயற்கை சூழலையும் வருணனைகள் மூலம் வெளிப்படுத்துகின்றது.

**இயற்கைப் புணர்ச்சி**

தலைவனும் தலைவியும் முதன்முதலாக எதிர்பாராமல் சந்தித்து மனதால் விருப்பம் கொள்வது இயற்கை புணர்ச்சியாகும். இது தெய்வத்தாலும் தலைவியாலும் நிகழும் என்று இலக்கணநூல் குறிப்பிடுகிறது.

**"தெய்வம் தன்னின் எய்தவும் கிழத்தியின்**
**ஏய்தவும் பருஉம் இயற்கைப் புணர்ச்சி"**
***(நம்பி. அக. 33)***

உலக வாழ்வில் மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானவையாக திகழ்வது அன்பு. தலைவன் தலைவியின் அகவாழ்விற்கு அடிப்படையானதும் குறிஞ்சி நிலத்தின் உரிப்பொருள் கூறாகவும் விளங்குகின்றது. என்னுடையதாயும் உன்னுடையதாயும் எந்த வகையில் உறவினர் என்று அறியவில்லை. நீயும் நானும் எக்குடியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், செம்மண் நிலத்தில் மழைநீர் கலந்தது போல நம்முடைய நெஞ்சங்கள் அன்பால் கலந்தன என்பதை,

***யாயும் ஞாயும்யார் ஆகியரோ?***
***எந்தையும்நுந்தையும்எம்முறைக்கேளிர்?***
***யானும் நீயும் எவ்வழி அறிதும்?***
***செம்புலப்பெயல் நீர்போல***
***அன்புடை நெஞ்சம்தாம் கலந்தனவே.***
***(குறு: பா.எ 40)***

என்ற வரிகள் வாயிலாக அறிந்துக் கொள்ள முடிகின்றது. தலைவன் தலைவியின் மீது கொண்டுள்ள அன்பினை பாங்கனிடம் எடுத்துரைக்கிறான். முதலில் பாங்கனை வாழ்த்தி தன்னை ஈர்த்த அழகிய கூந்தலையும் பருத்த தோள்களையும் உடைய தலைவியின் மென்மையான மேனியை தழுவினால், அதன் பிறகு அரைநாள் கூட வாழ்வதையும் வேண்டேன், என கூறினான். இதனை

**கேளிர்! வாளியோ, கேளிர்! நாளும்என்**
**நெஞ்சுபிணிக் கொண்ட அம்சில் ஓதிப்**
**பெருந்தோட்குறுமகள் சிறுமெல்ஆகம்**
**ஒருநாள் புணரப்புணரின்,**
**வாழ்க்கையும் வேண்டலன்யானே**
***(குறு. பா.எ 280)***

தலைவியின் மேனிகாந்தள், முல்லை, குவளைமுதலியபூக்களால்கோர்த்துகட்டப் பெற்ற மாலையைப் போன்று மணம்வீசுவதாகவும், அவளது மேனிதளிரைக் காட்டிலும் மென்மையாகவும், தழுவுவதற்கு இனிமையானதாகவும் உள்ளது என்று தலைவன் வருணிக்கிறான். இதனை,

**கோடல், எதிர்முகைப் பசுவீமுல்லை,**
**நாறு இதழ்க்குவளையோடு இடையிடு**
**புவிரைஇ,**
**ஐதுதொடை மாண்ட கோதைபோல,**
**நறிய நல்லோள்மேனி**
**முறியினும் வாய்வது முயந்திருக்கும் இனிதே**
***(குறு. பா.எ 62)***

என்னும் பாடல் குறிப்பிடுகின்றது. கடலால் சூழப்பெற்ற உலகத்தையும் தேவலோகத்தையும் அளித்தாலும் கூட தலைவியுடன் புணர்தலால் உண்டான இன்பத்திற்கு இணையாகாது என்று தலைவன் கூறுகிறான்.

**விரிதிரைப் பெருங்கடல்வளை இயஉலகமும்**
**அரிது பெறுசிறப்பின்புத் தேள்நாடும்**
**இரண்டும்தூக்கின் சீர்சாலாவே**
**பூப்போல் உண்கண்பொன் போல்மேனி**
**மாண்வரி அல்குல் குறுமகள்**
**தோள்மறுபடூ உம்வைகலோடு எமக்கே**
***(குறு. பா.எ 101)***

களவு வாழ்க்கையின் முதற்படி நிலையாக தலைவன் தலைவியின் இயற்கை புணர்ச்சி திகழ்கிறது. மேற்கண்ட பாடல்களில் தலைவன் தலைவியின் அன்பு, தலைவன் தலைவியை தழுவுவதற்கு கொண்ட வேட்கை, தலைவியைக் கூடுவதால் தலைவன் பெற்ற இன்பம் முதலியவை இயற்கை புணர்ச்சியின் கண்கொண்ட பாடுபொருளாக விளங்குகின்றது.

### இருவகைக் குறி

களவு வாழ்க்கையில் தலைவனும் தலைவியும் சந்திக்கும் இடத்தை, பகற்குறி, இரவுக் குறி என இருவகையாக சுட்டுகின்றனர். இதனைத் தொல்காப்பியர்,

**"குறிஎனப்படுவது இரவினும் பகலினும்**
**அறியத் தோன்றும் ஆற்றது என்ப"**
**(தொல். பொரு. 128)**

என்னும் நூற்பா மூலம் சுட்டுகிறார். தலைவி தலைவனை சந்திப்பதற்கான இடத்தை கூறுகிறாள். தலைவனும் தலைவியைக் காணும் பொருட்டு அவ்விடம் செல்வான். அங்கு தலை விவராதது கண்டு மனம்வருந்தி காணப்படுகிறான்.

**"இல்லோன் இன்பம்கா முற்றாஅங்கு**
**அரிதுவேட்டனையால் நெஞ்சேகாதலி**
**நல்லள் ஆகுதல் அறந்தாங்கு**
**அரியள் ஆகுதல் அறியாதோயே"**
**(குறு. பா.எ 120)**

பொருள் இல்லாதவன் இன்பத்தை விரும்பியது போல் தலைவனும் தலைவியும் களவு வாழ்க்கையில் இருப்பதால் நினைத்த நேரங்களில் காணுவதற்கு அரியவளாக உள்ளாள் எனத் தலைவன் தலைவியை கண்ணுறுவதன் ஆவல் பாடுபொருளாக் கொள்ளப்படுகிறது.

### மடலேறுதல்

மடலேறுதல் என்பது தலைவன் தலைவியை பெறுவதற்காக பனைமடலால் செய்யப்பட்ட தேரில் தான் விரும்பும் தலைவியின் ஊரார் முன்னிலையில் தன்னை வருத்துவதாகும். இச்செயல் சங்கப் பாடல்களில் பரவலாக காணப்படும் ஒன்றாகும். தலைவனின் காதல் மிகுதியாலும் தலைவியை மணம் செய்ய இடர்பாடுகள் எழும் போதும் மடலேறுதல் நடைபெறும்.

**"மாஎனமடலும் ஊர்பபூஎனக்**
**குவிமுகிழ் எருக்கங்கண்ணியும் சூடுப**
**மறுகின் ஆர்க்கவும் படுப**
**பறிதும் ஆகுபகாமம் காழ்க்கொளினே"**
**(பா.எ 17)**

தலைவனின் காம உணர்வுமிகும் போது பனைமடலைகுதிரைஎனகருதியும்எருக்கம் பூவினை சூடியும் ஊரார் ஆரவாரித்து பேசும் வகையில் செயல்படுவான்.

**"காலையும் பகலும்கையறு மாலையும்**
**ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்று இப்**
**பொழுது இடைதெரியின் பொய்யே காமம்**
**மாஎனமடலொடுமறுகில் தோன்றித்**
**தெற்றெனத்தூற்றலும் பழியே**
**வாழ்தலும் பழியே பிரிவு தலைவரினே"**
**(குறு. பா.எ 32)**

**"விழுத்தலைப் பெண்ணை விளையல் மாமடல்**
**மணிஅணி பெருந்தார் மரபிற்பூட்டி**
**வெள்என்பு அணிந்து பிறர்எள்ளத் தோன்றி**
**ஒருநாள் மருங்கில் பெருநாண் நீங்கி**
**தெருவின் இயலவும் தருவது கொல்லோ**
**கலிழ்கவின் அசைநடைப்பேதை**
**மெலிந்திலள் நாம்விடற்கு அமைந்ததூதே"**
**(குறு. பா.எ 182)**

முதலிய பாடல்கள் குறிஞ்சி நிலத்தலைவனின் மடலேறுவதைப் பாடுபொருளாகக் கொண்டு பாடப்பெற்றுள்ளன.

### இடந்தலைப்பாடு

இயற்கை புணர்ச்சியில் முதல் நாள் ஈடுபட்ட தலைவன் மீண்டும் அவ்விடத்தில் தலைவியை சந்திக்க முற்படுவான். இந்நிலையில் தலைவியும் இதற்கு உடன்பட்டால் சந்திப்பு நிகழும்.

**"தீண்டலும் இயைவது கொல்லோமாண்ட**
**வில்லுடை வீளையர்கல் இடுபுஎடுத்த**
**நனந்தலைக்கானத்து இனம் தலைப்பிரிந்த**
**புண்கண்மடமான் நேர்படதன்னையர்**
**சிலைமாண் கடுவிசைக்கலை நிறத்து அழுத்திக்**
**குருதியொடு பறித்த செங்கோல்வாளி**
**மாறு கொண்டன்ன உண்கண்**
**நாறு இருங்கூந்தல் கொடிச்சிதோளே"**
**(குறு. பா.எ 272)**

இப்பாடலில், மை யுண்ட கண்களையும் மணம் பொருந்திய கருமையான கூந்தலையும்

உடைய தலைவியின் தோள்களை மீண்டும் தழுவுவது எனக்கு நிகழுமோ என்று தலைவன் பாங்கனிடம் கூறுகிறான். இதன் மூலம் இடந்தலைப் பாட்டின் வாயிலாக தலைவன் தலைவி மீது கொண்ட வேட்கை பாடுபொருளாக அமைந்துள்ளதை அறிய முடிகின்றது.

### தலைவியின் அன்பு

தலைவன் மீது தலைவி கொண்டுள்ள அன்பின் ஆழமானது வானத்தை விட உயர்ந்தது நிலத்தை விட பெரியது இதனை

**"நிலத்தினும் பெரிதேவானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆர் அளவின் றேசாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடுநட்பே"**

**(குறு. பா.எ 3)**

என்னும் பாடல் வரிகள் புலப்படுத்துகிறது. இதில் தலைவியின் அன்பு பாடுபொருளாக அமைகின்றது.

### வரைவு எண்ணி வருந்துதல்

இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைப் புணர்ந்த தலைவன் தலைவியை மணப்பதாக கூறிபிரிந்து செல்வான். அவன் சொல்லிய நாளில் வராததை எண்ணி தலைவி மிக்கதுயர் அடைந்து தோழியிடம் கூறி வருந்துவாள். இதனை,

**"புனவன்துடவைப் பொன்போல் சிறுதினைக்**
**கடிஉண்கடவுட்கு இட்டசெழுங்குரல்**
**அறியாது உண்டமஞ்ஞை ஆடுமகள்**
**வெறிஉறுவனப்பின் வெய்துற்றுநடுங்கும்**
**சூர்மலை நாடன் கேண்மை**
**நீர்மலி கண்ணொடு நினைப்பு ஆகின்றே"**

**(குறு. பா.எ 105)**

என்னும் பாடலில் தலைவன் மீது தலைவி கொண்ட அன்பானது என்றென்றும் கண்களில் நீர்த்துளிகளை வரவைப்பதாக அமைகின்றது. இதில் தலைவி வரைவு காலத்தை எண்ணி வருந்துவதாக பாடுபொருள் கொள்ளப்படுகிறது.

### முடிவுரை

சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என வகைப்படுத்தப்பட்டு பழங்கால மக்களின் வாழ்வியலை இன்று நாம் அறிந்து கொள்ளவும் அதனை பின்பற்றவும்அடித்தளமாகஅமைந்துள்ளது. சங்கத் தமிழர்கள் இயற்கையை பேணி அதன் மூலமே வாழ்வை முன்னெடுத்துச் சென்றுள்ளனர். அவர்களதுவாழ்வியல் கூறுகள் முறையே அகவாழ்வு, புறவாழ்வு எனத் திணையடிப்படையில் வகுத்து ள்ளனர். குறுந்தொகையில் 146 குறிஞ்சி த்திணை பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இதில்தலைவன்தலைவிகூற்று, தோழிகூற்று, பாங்கன்கூற்று, முதலிய கூற்று வகைகள் காணப்படுகிறது. கூற்று பொதுவாகத் தலைவன் தலைவியரின் களவு முதல் கற்பு வரையிலான படிநிலைகளையே திணை சார்ந்த வருணனைகளோடு வெளிப்படுத்துகின்றது. குறுந்தொகை பாடல்கள் இயற்கையோடு இயைந்த ஓர் காதல் காட்சியை உணர்த்துகின்றன. தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகையில் குறிஞ்சித்திணை பாடல்களின் வழியாக குறிஞ்சி நிலத் தலைமக்களின் பாடுபொருளாக தலைவன் தலைவியின் அன்பு, இயற்கைபுணர்ச்சி, இடந்தலைப்பாடு, வரைவு வேண்டி வருந்துதல், மடலேறுதல் என முழுவதும் தலைவன் தலைவியின் அகவாழ்வை மையமாகக் கொண்டே பாடப்பட்டுள்ளது என்பது புலனாகிறது.

### துணைநூற்பட்டியல்

1. சாமிநாதையர் உ. வே., குறுந்தொகை மூலமும் உரையும், சுதர்ச ன்கிராஃபிக்ஸ்பிரை வேட்லிமிடெட், தியாகராயநகர், சென்னை - 600 017, முதல்பதிப்பு - 1937.
2. சுப்பிரமணியம் சா.வே., தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், முதல் பதிப்புமே - 1998.

3. திருஞானசம்பந்தம் ச., நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம், கதிர்பதிப்பகம், தெற்குவீதி, திருவையாறு.
4. நாகராசன்வி., நியூசெஞ்சரிபுக் ஹவுஸ் (பி) லிமிடெட்., 41 - பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை, முதல்பதிப்பு - 2004.
5. மாணிக்கம் வ. சுப., தமிழ்காதல், பாரி நிலையம் 59 - பிராட்வே, சென்னை, முதற்பதிப்பு - 1962.